# Tamil-Muslim Ethnic Harmony Initiatives by Marhoom Ahamed Lebbe - A Historical Study

# மர்ஹூம் அஹ்மத் லெப்பை அவர்கள் மேற்கொண்ட தமிழ் - முஸ்லிம் இன நல்லுறவுக்கான முனைவுகள் - ஒரு வரலாற்றாய்வு

M.L. Mohamed Helfan[1] and S.M.M. Mazahir[2]

[1]MOH Office, Padavi Sripura, [2]Faculty of Islamic Studies & Arabic Language, SEUSL mlhelfan@gmail.com, mazahirsmm@seu.ac.lk

**Abstract:** The purpose of this study is to explore the individual contributions of Marhoom Ahamed Lebbe in building ethnic harmony between Tamils and Muslims to keep the strengthen relationship in Batticaloa district, Sri Lanka which is a multi-ethnic country. This characteristic historical study focuses on primary and secondary data. Interviews were conducted with eight (08) his closest associates through over the phone, as well as books, magazines and historical documents about him were also reviewed. Accordingly, he, fatherly training from his early age with good characteristics, his first government appointment in Tamil division and his knowledge of English were the basis for building Tamil-Muslim ethnic harmony. Sociological welfare development projects were carried out through the Batticaloa society of Commerce and, to date, both communities have been benefited. As well as promoting religious and literary events and giving prominence to Tamil-Muslim relations and building ethnic harmony. He was not elected to the Parliament due to his political instincts while he was elected as the Chairman representing Kattankudy. His contribution to social enhancement with the help of Tamil politicians are still remembered today. It also paved the way for the people of Batticaloa district to gain dual representation and put an end to racial violence during his lifetime. The friendship with the Tamil high officials helped to free the abducted Muslim civilians and traders. Therefore, the study emphasizes the need for individual personalities to build Tamil-Muslim ethnic harmony and to make suggestions on the steps to be taken in this regard and to assist future researchers in this regard.

**Keywords:** Tamil-Muslim Ethnic Relations, Ahamed Lebbe, Kattankudy and Contribution.

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கை பல்லின சமூகங்களைக் கொண்ட நாடு என்ற வகையில் அவர்களுடனான உறவை வலுப்படுத்துவதில் நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் இடம்பெறும் இச்சூழலில் கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்-முஸ்லிம் இனநல்லுறவைக் கட்டியெழுப்பியதில் தனிமனிதனான மர்ஹூம் அஹமத் லெப்பை அவர்கள் மேற்கொண்ட பங்களிப்புக்களை வெளிக்கொணர்தல் இவ்வாய்வின் நோக்கமாகும். பண்புரீதியில் அமைந்த இவ்வரலாற்றாய்வு முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தியதாகும். அஹமத் லெப்பை அவர்களுடன் மிக நெருக்கமுடைய முக்கியஸ்தர்கள் 08 பேரிடம் தொலைபேசி ஊடாக நேர்காணல் மேற்கொள்ளப்பட்டு கிடைக்கப்பெற்ற தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. மேலும் இவர் தொடர்பாக வெளியிடப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் வரலாற்று ஆவணங்கள் என்பன மீளாய்வு செய்யப்பட்டன. அதன்படி தமிழ்-முஸ்லிம் இனநல்லுறவைக் கட்டியெழுப்புவதற்கான அடிப்படைப் பண்புகளைக் கொண்டவராக இளம்பிராயத்திலிருந்து அஹமத் லெப்பை அவர்கள் தந்தைவழியாக பயிற்றுவிக்கப்பட்டமை, தமிழ் பிரதேசத்தில் முதல் அரச நியமனம் கிடைத்தமை, அவரிடம் காணப்பட்ட ஆங்கில அறிவு என்பன இன நல்லுறவைக் கட்டியெழுப்புவதற்கு அடிப்படையாக அமைந்துள்ளன. மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தின் ஊடாக சமூகவியல் நலன் மேன்பாட்டு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு இன்றுவரை இரண்டு சமூகத்தினரும் நன்மை அடைய வழியமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தன. அத்துடன் சமய மற்றும் இலக்கியம்சார் நிகழ்வுகளை முன்னெடுத்து, தமிழ்-முஸ்லிம் உறவுகளுக்கான பிரதான இடம் வழங்கப்பட்டு, இனநல்லுறவு கட்டியெழுப்பப்பட்டிருந்தன. இளமைப்பருவத்தில் குடிகொண்டிருந்த அரசியல் உணர்வின் மூலம் பாராளுமன்ற பிரதிநிதியாக தெரிவு செய்யப்படாத போதிலும் காத்தான்குடிப் பிரதேசத்தைப் பிரதிநிதிப்படுத்தும் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டு சமூக பணியாற்றியமை மற்றும் தமிழ் அரசியல்வாதிகளின் உதவிகளைப் பெற்று சமூக முன்னேற்றத்திற்கு வித்திட்டிருந்தமை இன்றும் நினைவுபடுத்தப்படுகின்ற அம்சங்களாக மாறியுள்ளன. மேலும் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் இரட்டை பிரதிநிதித்துவத்தைப் பெற வழியமைத்துக் கொடுத்ததோடு, இவர் வாழ்ந்த காலத்தில் இன வன்முறைக்கு முற்றுப்புள்ளியும் வைக்கப்பட்டன. தமிழ் உயர் அதிகாரிகளுடன் கொண்டிருந்த சிநேகிதம், கடத்தப்படும் முஸ்லிம் பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளை விடுவிப்பதற்கு உதவியாக அமைந்தன. எனவே, தமிழ்-முஸ்லிம் இன நல்லுறவைக் கட்டியெழுப்புவதற்கான தனிமனித ஆளுமைகளின் அவசியம் வலியுறுத்தப்படுவதோடு, அதற்கான முன்னெடுப்புக்கள், வழிகாட்டல்கள் பற்றிய முன்மொழிவுகளைத் தருவதாகவும், எதிர்காலத்தில் இவ்விடயத்தில் ஆய்வை மேற்கொள்வோருக்கு உதவுவதாகவும் இவ்வாய்வு அமைகிறது.

**திறவுச் சொற்கள்:** தமிழ்-முஸ்லிம் இனநல்லுறவு, அஹமத் லெப்பை, காத்தான்குடி, பங்களிப்புக்கள்

**ஆய்வுப் பின்னணி**

இலங்கை பல்லின சமூகங்களைக் கொண்டுள்ள ஒரு பன்மைத்துவ நாடாகும். ஒவ்வொரு இனமும் இந்நாட்டில் பலமைவாய்ந்த வரலாற்றைக் கொண்டுள்ளமை அவர்களின் இருப்பு உறுதி செய்யப்படுவதற்கும் இன நல்லுறவு கட்டியெழுப்பப்படுவதற்கும் வழியாக அமைந்துள்ளன. பன்மைத்துவ அமைப்பைக் கொண்டுள்ள இந்நாட்டில் ஒவ்வொரு சமயத்தவர்களின் பண்பாட்டுக் கோலங்களும் மாறுபட்டுக் காணப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் இன முரண்பாடுகளும் மேலோங்கி பல்வேறு விதமான இழப்புக்களையும் அச்சமூகங்கள் அடையவேண்டியும் ஏற்பட்டுள்ளன. இத்தகைய சந்தர்ப்பங்களில் இனங்களிடையே நல்லுறவுகளை பேணிக்காப்பதற்கான செயற்பாடுகள் ஆரம்ப காலம் முதல் இன்று வரை சமய, சமூக, அரசியல் மற்றும் தொண்டர் அமைப்புக்களினால் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு, தனிமனிதர்களும் இதற்காக போராடியுள்ளமைக்கு வரலாறு சான்றுபகர்கின்றது.

இவ்வாறான நிலையில் கிழக்கு மாகாணம் தமிழ் (614,184), முஸ்லிம் (574,327) மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட பிராந்தியமாகும். இவ்விரு இனத்தினரும் தமிழை தாய் மொழியாகக் கொண்டிருப்பதோடு, அவர்களின் கலாசார அம்சங்களில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இப்பிராந்திய மக்கள் பன்நெடுங்காலமாக ஒருவருக்கொருவர் புரிந்துணர்வுடனும் ஒற்றுமையுடனும் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அவ்வாறே வாழ்ந்தும் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு சான்றுகள் பல காணப்படுகின்றன. பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் குறிப்பிடுவது போன்று தமிழர்களும் முஸ்லிம்களும் ‘‘பிட்டும் தேங்காய்ப்பூவும் போல’’ கலந்து வாழ்ந்து வருகின்றார்கள். (றமீஸ் அப்துல்லாஹ், 1997). முன்னாள் அமைச்சர் செ. இராசதுரை அவர்களின் கருத்துப்படி இரு சமூகத்தாரும் பிட்டும் தேங்காய்ப்பூவும் போல வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் வாழும் பகுதிகளில் இடைக்கிடையில் சிறு சிறு விரிசல்கள் ஏற்பட்டாலும் கூட ஈரினத்தாரும் இதயத்தால் இணைந்தே வாழ்கின்றனர். (புஹாரி, 2014) அவ்வாறே புலவர் மணி பெரிய தம்பிப் பிள்ளை அவர்களின் கருத்துப்படி ‘‘இருதயத்தின் அமுதம் போல் தமிழ் முஸ்லிம் ஒரு வயிற்றுப் பிள்ளை’’ எனக் குறிப்பிடுகின்றார். (புஹாரி, 2014) இத்தகைய பதிவுகள் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதை நிரூபிக்க போதுமான சான்றுகளாக உள்ளன.

மேற்படி நிபுணர்களின் கருத்துப்படி முஸ்லிம் தமிழ் உறவுகள் மிகவும் தொன்மையான வரலாற்றைக் கொண்டவையாக காணப்பட்ட போதிலும் நிலம், சந்தர்ப்பவாத அரசியல், தமிழ்ப் போராளிகளின் போராட்டத்திற்கு முஸ்லிம்கள் ஒத்துழைக்காமை, ஒரு சமூகத்தை மற்றைய சமூகம் நன்றாகப் புரியத் தவறியமை, ஒரு இனத்தின் மீது கொண்ட காழ்புணர்ச்சி, பண்படுத்தப்படாத இளைஞர்களின் அவசர செயற்பாடுகள் முதலிய காரணங்களால் தமிழ்-முஸ்லிம் உறவுகளில் விரிசல்கள் ஏற்படத் தொடங்கின. இத்தகைய பின்னணிக் காரணிகள் சிறுகச் சிறுக வேரூன்றி வளர்ந்ததன் விளைவாக கிழக்கு மாகாணத்தில் 1985, 1990ஆம் ஆண்டுகளில் தமிழ்-முஸ்லிம் இன முரண்பாடுகள் மேலோங்கி பல வருடங்களாக தொடர்ந்தன. இதனால் முஸ்லிம்கள் பல்வேறு விதமான பாதிப்புக்களுக்கு உள்ளானார்கள். இன்றுவரை ஈடுசெய்ய முடியாத பல உயிர்களை முஸ்லிம்கள் இழந்தார்கள் என்பதை ஒவ்வொரு வருடமும் காத்தான்குடி மற்றும் ஏறாவூரில் இடம்பெறும் ஷூஹதாக்கள் தின

நினைவேந்தல்கள் ஞாபகமூட்டி வருகின்றன. இத்தகைய சூழ்நிலையில் பல்வேறு அமைப்புக்களும் இன நல்லுறவைக் கட்டியெழுப்பப் பாடுபட்டிருக்கின்றன. குறிப்பாக இச்சூழ்நிலையில் இலைமறை காயாய் இருந்து தமிழ்-முஸ்லிம் இன நல்லுறவைக் கட்டியெழுப்பியதில் தனி மனிதனாக நின்று உழைத்தவராக மர்ஹூம் அஹமத் லெப்பை அவர்கள் சாதனையாளராக சமூகத்தினால் இனங் காணப்பட்டுள்ளார். (புஹாரி, 2014)

இவர் 14.10.1935ஆம் ஆண்டு அலியார் லெப்பை ஹாஜி, ஹதீஜா அலியார் லெப்பை ஆகியோருக்கு மகனாக காத்தான்குடி மூன்றாம் குறிச்சியில் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை காத்தான்குடி 5ஆம் குறிச்சி பழையதெரு அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையிலும் 1948ஆம் ஆண்டு இரண்டாம் நிலை கல்வியை மட்டக்களப்பு ஹிந்து கல்லூரியிலும் பெற்றிருந்தார். 1952ஆம் ஆண்டு ஆங்கில மொழி மூலம் நடைபெற்ற எஸ்.எஸ்.சி பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்தார்.

பாடசாலை கல்வி பயிலும் போதே மார்க்க விடயங்களிலும் கூடுதல் கரிசனை காட்டியுள்ளார். அல்குர்ஆனை திருத்தமாக ஓதக் கற்றிருந்தார். இளமையிலே மார்க்க அறிவைப் பெற்றுக் கொண்ட இவர் எல்லா விடயங்களையும் இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் பார்க்கக் கூடியவராக இருந்தார். சமூகப் பணியிலும் ஆர்வம் கொண்ட இவர் அரசியல், பொருளாதாரம், கல்வி, கலை, கலாசாரம் என பல துறைகளிலும் பங்களிப்புச் செய்தமைக்கு சான்றுகள் உள்ளன. எனவேதான் பல்துறைசார் பங்களிப்புக்களுக்கு வித்திட்டிருக்கும் இப்பின்னணியில் இனநல்லுறவுக்கான பங்களிப்புக்களை பிரித்து நோக்குவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

அஹமத் லெப்பை அவர்கள் பிறந்து வளர்ந்த மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்-முஸ்லிம் மக்கள் செறிந்து வாழ்ந்ததினால் இவ்விரு இனத்தாருக்கிடையில் இன நல்லுறவைக் கட்டியெழுப்பியதில் தனது பங்களிப்பை எவ்வாறு வழங்கினார் என்பதைத் தேடுவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

தமிழ்-முஸ்லிம் இன நல்லுறவை கட்டியெழுப்புவதில் மர்ஹூம் அஹமத் லெப்பை போன்ற தனி ஆளுமைகள் உழைத்துள்ளதால் இன நல்லுறவு பேணப்பட்டிருந்தன. ஆனால் இன்றைய சுழலில் இன நல்லுறவை கட்யெழுப்பும் தனி ஆளுமைகளை கண்டு கொள்ள முடியாத சூழ்நிலை காணப்படல்.

**ஆய்வின் நோக்கம்**

தமிழ்-முஸ்லிம் இனநல்லுறவை கட்டியெழுப்பியதில் மர்ஹூம் அஹமத் லெப்பை அவர்கள் கையாண்ட நுட்பங்கள் மற்றும் இது தொடர்பான அவர்களின் பங்களிப்புக்களை வெளிக்கொணர்தல் இவ்வாய்வின் நோக்கமாக அமைந்துள்ளது.

**ஆய்வு முறையியல்**

பண்புரீதியில் அமைந்த இவ்வரலாற்றாய்வு முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தியதாகும். அஹமத் லெப்பை அவர்களுடன் மிக நெருக்கமுடைய முக்கியஸ்தர்கள் 08 பேரிடம் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டதோடு, அஹமத் லெப்பை

அவர்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் வரலாற்று ஆவணங்கள் என்பன மீளாய்வு செய்யப்பட்டன. கிடைக்கப் பெற்ற தகவல்கள் குறிமுறை அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

**கலந்துரையாடல், பிரதான கண்டறிதல்கள்**

சமூகம் என்ற எண்ணக்கருவின் முக்கியத்துவம் தந்தைவழியாக தனயனுக்கு கடத்தப்பட்டதனால் அஹமத் லெப்பை அவர்கள் தனது இளம் பிராயத்திலிருந்து அவற்றைக் கட்டியெழுப்புவதற்கான ஆளுமைகளை தன்னுள் வளர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்ததை கண்டு கொள்ள முடிந்தது.

இளமையில் பெற்ற மார்க்க அறிவு, மார்க்க அறிஞர்களுடனான தொடர்பு, ஏழைகளின் துன்பங்களில் பங்கெடுக்கும் மனப்பாங்கு, இறை அச்சம், நல்லொழுக்கம், தலைமைத்துவப் பண்பு, சமூகம் பற்றிய தூரநோக்கு என்பன மேலும் அவரை சமூக ஆர்வளராக மாற்றியமைக்க வழிவகுத்திருந்ததை கண்டுகொள்ள முடிந்தது.

அதுமாத்திரமன்றி ஆங்கிலத்தில் புலமை பெற்றிருந்ததன் காரணமாக (எழுதுவினைஞர்) அரச தொழில் புரியும் வாய்ப்பு அவருக்கு கிடைத்திருந்தது. குறிப்பாக தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் ஒன்றான செங்கலடி பிரதேசத்தில் அமைந்திருந்த உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் கடமையாற்றும் சந்தர்ப்பம் முதல் நியமனத்திலேயே கிடைத்தமை தமிழ் மக்களுடன் நன்றாகப் பழகி அவர்களின் பண்பாடுகளை புரிந்து கொள்ளும் நிலையை அவருக்கு பெற்றுக்கொடுத்திருந்தன. இதனால் தமிழ் உயர் அதிகாரிகள் பலருடன் பண்பாக பழகி அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவராக காணப்பட்டார். இவருக்குக் கிடைத்த இவ்வாய்ப்பு தமிழ்-முஸ்லிம் இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் உருவாகும் நேரத்தில் அதனை தீர்த்துவைக்கும் ஒரு இணைப்பாளராக செயற்படுவதற்குரிய தகைமையை இவ்விடயம் பெற்றுக் கொடுத்திருப்பதை காண முடிந்தது. (நேர்காணல்: செல்வம், 2021)

இவர் வாழ்ந்த காலப்பகுதியில் பல்வேறு இனமுரண்பாடுகள் சமூகத்தின் மத்தியில் வேரூன்றிக் காணப்பட்டிருந்தன. அச்சந்தர்ப்பங்களில் எல்லாம் சமூக முரண்பாட்டுக்குக் காரணமான விடயங்களை அடையாளம் கண்டு குறிப்பிட்ட தரப்பினருடன் துணிச்சலோடு பேச்சுவார்த்தை மேற்கொண்டு சமூகத்தின் அமைதிக்காக பெரிதும் பாடுபட்டிருக்கின்றார். இவருடைய தலைமைத்துவப் பண்பின் காரணமாக கடத்தப்பட்ட முஸ்லிம் வியாபாரிகளையும் தமிழ் தலைமைகளிடமிருந்து விடுவிப்புச் செய்திருக்கின்றமை இவர் பற்றிய நல்ல பதிவை வெளிக்கொணர்கின்றது.

***சமூகவியல்சார் இனநல்லுறவு***

1952ஆம் ஆண்டு ஆங்கில மொழியில் நடைபெற்ற எஸ்.எஸ்.சி பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்ததோடு அதற்குப் பின்னர் நடைபெற்ற பொது எழுதுவினைஞர் பரீட்சையிலும் சித்தி பெற்று செங்கலடி உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் எழுதுவினைஞராக கடமைகளைப் பொறுப்பேற்றிருந்தார். (புஹாரி, 2014) இத்தகைய வாய்ப்பு தமிழ் மக்களை பெரிதும் கொண்டிருந்த செங்கலடி பிரதேசத்தில் தமிழ் மக்களுக்கு சேவை செய்யும் வாய்பை

அவருக்கு ஏற்படுத்திக் கொடுத்ததோடு, தமிழ் உயர் அதிகாரிகளிடமும் மிகவும் நெருக்கமான தொடர்புகளை பேணி இன நல்லுறவுக்கான ஏற்பாட்டை தனது அரச பணியிலிருந்தே ஆரம்பித்திருக்கிறார் என்பது புலனாகின்றது.

அஹமத் லெப்பை அவர்களின் தமிழ்-முஸ்லிம் இனநல்லுறவுக்கான மற்றுமோர் அடித்தளமாக 1955ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மட்டக்களப்பு வர்த்தக சங்கம் பெரிதும் உதவியிருப்பதை எமது ஆய்வில் அடையாளம் காண முடிந்தது. இச்சங்கத்தின் பொதுச் செயலாளராக அஹமத் லெப்பை அவர்கள் நியமிக்கப்பட்டிருந்ததோடு, ஏனைய உறுப்பினர்களாக முஸ்லிம்கள் காணப்பட்டாலும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் மக்களையும் பெரிதும் அரவணைத்திருப்பதை கண்டுகொள்ள முடிந்தது. (நேர்காணல்: குப்பன் கோபால், 2021) இச்சங்கத்தை நாடி வரும் தமிழர்கள் தமது தேவைகளைக் தம்மால் நிறைவேற்ற முடியாது போகும் சந்தர்ப்பங்களில் எல்லாம் அத்தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுப்பதற்காக தனது சாதாரண துவிச்சக்கர வண்டியின் துணையுடன் மட்டக்களப்பு மாவட்ட செயலகம், கல்வி வலயம் போன்ற அரச நிறுவனங்களுக்குச் சென்று தமிழ் மக்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்திருப்பதானது தமிழ் மக்கள் அஹமத் லெப்பை அவர்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையையும் தமிழ்-முஸ்லிம் உறவை மேம்படுத்துவதில் அவர்கள் காட்டிய பிரயத்தனங்களையும் வெளிக்காட்டியுள்ளன.

1978ஆம் ஆண்டு இடம்பெற்ற சூறாவளி அனர்த்தத்தினால் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அத்தகைய அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இனம், மதம் பாராமல் உதவ வேண்டும் என்பதற்காக சூறாவளி அகதிகள் புனர்வாழ்வு கழகம் ஒன்றை உருவாக்கி உதவிகள் பல செய்திருந்தார். (நேர்காணல்: முபாரக், 2021) மேலும் கூட்டுறவு சங்கத்தை உருவாக்கி பணி செய்ததோடு, இயற்கை அனர்த்தங்களின் போது மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்கான பிரத்தியேகமான ஏற்பாட்டையும் செய்திருந்தார். இத்தகைய செயற்பாடுகள் இனநல்லுறவுக்காக அஹமத் லெப்பை அவர்கள் மெற்கொண்ட சேவையாகவே பார்க்க முடிந்தது.

காத்தான்குடி பிரதேச மக்கள் அயல் பிரதேசமான ஆரையம்பதியில் உள்ள வைத்தியசாலைக்கு மருத்துவத் தேவைகளுக்காக சென்றுவருவது இயல்பாக இருந்தது. இச்சந்தர்ப்பத்தில் இரண்டு சமூகங்களுக்குமிடையில் இனநல்லுறவில் விரிசல் ஏற்பட்டது. இதனை சரிசெய்யும் முகமாக முஸ்லிம் நபர் ஒருவரால் கடற்கரையை அண்மித்த பகுதியில் அன்பளிப்புச் செய்யப்பட்ட நிலத்தில் வைத்தியசாலையை அமைத்துக் கொடுத்து அதற்கான வைத்தியரை நியமித்தும் கொடுத்தார். (நேர்காணல்: முபாரக், 2021) எனவே, 1986ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இவ்வைத்தியசாலையில் இன, மத பேதமின்றி அனைத்து மக்களும் இன்றுவரை நன்மை அடைவதற்கு அஹமத் லெப்பை அவர்கள் வழியமைத்துக் கொடுத்திருப்பதை காண முடிகின்றது.

***இலக்கியம்சார் இனநல்லுறவு***

அஹமத் லெப்பை அவர்கள் பாடசாலைக் காலத்தில் இலக்கியச் செயற்பாடுகளில் பெரிதும் ஈடுபாடு காட்டியுள்ளார். மாணவர்மன்ற கூட்டங்களில் எல்லாம் இலக்கிய செழுமையுடன் உரையாற்றியுள்ளார். பாடசாலைக்கு வெளியே நண்பர்களை இணைத்துக் கொண்டு சனசமூக நிலையம் ஒன்றை உருவாக்கி ஏனைய பணிகளோடு, இலக்கியப் பணிகளையும் மேற்கொண்டிருந்தார். இலக்கியதாகம் காரணமாக இந்தியாவிலிருந்து பெறப்பட்ட தாருல் இஸ்லாம், முஸ்லிம் முரசு மற்றும் மணி விளக்கு போன்ற சஞ்சிகைகளை தொடராகப் பெற்று சனசமூக நிலையத்திற்கு வருகைதருபவர்கள் வாசிப்பதற்கான ஏற்பாட்டை செய்து கொடுத்தார். (நேர்காணல்: அலியார், 2021)

மகாத்மாகாந்தி சேவா மன்றத்தின் உறுப்பினராக அஹமத் லெப்பை அவர்கள் காணப்பட்டதோடு, அவ்வமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட தமிழ் விழாக்களில் பங்குபற்றி இனிய தமிழில் உரையாற்றினார்கள். (நேர்காணல்: செல்வம், 2021) மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் பலவற்றிலும் பங்குகொண்டிருந்தார்கள். இத்தகைய விடயம் தமிழ் மக்களை பிரதிநிதிப்படுத்துகின்ற இச்சங்கத்தில் முஸ்லிம் ஒருவருக்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டமை தமிழ் மக்களுடன் அவர் கொண்டிருந்த ஆழமான உறவை வெளிப்படுத்த போதுமான சான்றாக உள்ளன.

### *சமயம்சார் இனநல்லுறவு*

மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தின் சமயம் சார்ந்த பணிகளில் ஒன்றாக ஒவ்வொரு வருடமும் மீலாத் விழா ஏற்பாடு செய்யப்பட்டு இவ்விழாவுக்கு உள்ளூர் மற்றும் வெளியூர் பேச்சாளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் மற்றும் முன்னாள் மட்டக்களப்பு நகர முதல்வர் செல்லையா இராசதுறை போன்ற தமிழர்களுக்கு மீலாத் விழாவில் உரையாற்றுவதற்கான சந்தர்ப்பத்தை இச்சங்கம் வழங்கியிருப்பது இனநல்லுறவுக்கான அடித்தளம் இடப்பட்டிருந்ததை பறைசாற்றுகின்ற அம்சங்களாக காணப்படுகின்றன. (நேர்காணல்: விஷ்வலிங்கம் நாகராஜா, 2021)

### *அரசியல்சார் இன நல்லுறவு*

1947ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் முஸ்லிம் ஒருவரும் தமிழர்களில் மூவரும் போட்டியிட்டுக் கொண்டதோடு இத்தேர்தலில் முஸ்லிம் ஒருவரே தெரிவு செய்யப்பட்டார். அவ்வாறே 1952ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் முஸ்லிம் ஒருவரே வெற்றி பெற்றதினாலும் தமிழ் மக்கள் மத்தியில் இனக் குரோதம் மேலோங்கி இனக்கலவரத்திற்கு வித்திட்டது. இந்நிலை தொடராமல் இருப்பதற்கான முயற்சியாக தமிழ் சகோதர்களோடு இறுக்கமான உறவை கொண்டிருந்ததோடு, 1958ஆம் ஆண்டு தேர்தல் நிர்ணய ஆணைக்குழு மட்டக்களப்புக்கு விஜயம் செய்ததோடு, அக்குழுவின் ஊடாக இனநல்லுறவுக்கான வழியை ஏற்படுத்துவதில் அயராது உழைத்து 1960ஆம் ஆண்டு மட்டக்களப்பு தொகுதி இரட்டை அங்கத்துவ தொகுதியாக மாற்றப்பட்டு தமிழ் மக்களுக்கு ஒரு பிரதிநிதியையும் முஸ்லிம் மக்களுக்கு ஒரு பிரதிநிதியுமாக தெரிவு செய்யப்படுவதற்கு வித்திட்டு இனமுரண்பாட்டிலிருந்து சமூகத்தை பாதுகாத்த பெருமை இவரையே சாரும்

என்பதை நேர்காணலினூடாக அறிய முடிந்தது. (நேர்காணல்: அஹமட் லெப்பை மர்சூக், 2021)

அஹமத் லெப்பை அவர்கள் 1958ஆம் ஆண்டு தொடக்கம் 1977ஆம் ஆண்டு வரை நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் காத்தான்குடிப் பிரதேசத்தில் பாரிய வெற்றியை பெற்று தவிசாளராக இருந்து மக்கள் பணி செய்திருந்தார். (நேர்காணல்: தௌபீக், 2021) பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட போதும் சில சதிகளின் காரணமாக அவரால் வெற்றி பெறமுடியவில்லை. இருந்தபோதிலும் தமிழ் நண்பர்களாகவும் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் காணப்பட்ட செல்லையா இராசதுரை, இராஜன் செல்வநாயகம் போன்றவர்களுடன் நெருக்கமான உறவுகளை வைத்துக் கொண்டு அவர்களின் உதவியை மக்களுக்கு கொண்டு சேர்க்கும் பணியில் ஈடுபட்டிருப்பது தமிழ் பிரதிகளுடனான சிறந்த நட்பின் ஊடாக தமிழ்-முஸ்லிம் உறவு கட்டியெழுப்பப்பட்டிருப்பதை காண முடிந்தது.

முன்னாள் பிரதமர்களான டட்லி சேனாநாயக்கா, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன போன்ற அரசியல் தலைவர்களை கிழக்கிற்கு வரவழைத்து இங்குள்ள மக்களின் குறைகளை எடுத்துக் கூறி அம்மக்களுக்கான உதவிகளை இன மதம் பாராமல் பெற்றுக் கொடுத்திப்பதன் மூலமாக இனநல்லுறவு சிறப்பாக பேணப்பட்டிருக்கின்றது என்பதை நேர்காணலின் ஊடாக அறிய முடிந்தது. (நேர்காணல்: அலியார், 2021)

அஹமத் லெப்பை அவர்கள் தமிழ் மக்களுடன் நெருக்கமான உறவை வைத்துக் கொண்டு 1956ஆம் ஆண்டு தமிழ் அரசியல் தலைவர்களால் உருவாக்கப்பட்ட இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கு அனுசரனை வழங்கி அக்கட்சி மேற்கொண்ட செயற்பாடுகளுக்கு ஆதரவளித்துள்ளார். குறிப்பாக தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து நாட்டில் கிடைக்க வேண்டும் என்ற போராட்டத்தில் பங்கு கொண்டு தமிழ் மொழிக்காகப் பாடுபட்டுள்ளார். இத்தகைய செயற்பாடு இன நல்லுறவு வலுப்பெறுவதற்கு பங்காற்றியமை தெரிய வருகின்றது.

பயங்கரவாத செயற்பாடுகள் உச்ச நிலை அடைந்திருந்த காலத்தில் தமிழ் பிரதேசங்களில் இயங்கி வந்த குழுக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு சுமுக நிலை ஏற்பட வழிசெய்தார். தமிழ் பிரமுகர்களுடனான சந்திப்பின் போதெல்லாம் அமைதிக்கும் இன நல்லுறவுக்குமாக குரல் கொடுத்தார். அவரின் வார்த்தைகளுக்கு அன்றைய தமிழ் தலைவர்கள் முற்றிலும் கீழ்படிந்து செயற்படக் கூடியவர்களாக இருந்தார்கள். இவ்வாறு நெருக்கமான பிணைப்புடன் தமிழ் தலைமைகளுடன் செயற்பட்டிருக்கிறார் என்பது புலனாகின்றது.

கிறிஸ்தவ மதப் பெரியார் சந்திரா பெர்னான்டோ மற்றும் பிரஜைகள் குழுவினரையும் இந்திய அமைதி காக்கும் படையின் தளபதி ஒருவர் புலிகளின் ஆதரவாளர்கள் என்று குற்றம் சாட்டினார். இதனை எதிர்த்து பேசும் அளவுக்கு அச்சந்தர்ப்பத்தில் எவரும் முன்வரவில்லை. ஆனால் அஹமத் லெப்பை அவர்கள் மாத்திரமே துணிவுடன் எழுந்து ஆங்கிலத்தில் கம்பீரமான குரலில் அத்தளபதியின் கூற்றை மறுத்திருக்கிறார். (நேர்காணல்: அலியார், 2021) அந்தளவு தமிழ் மக்களுக்கு வரும் ஆபத்தை குறைக்கும் அளவுக்கு தலைமைத்துவப் பண்புடன் காணப்பட்டார் என்பது புலனாகின்றது.

1987.12.30ஆம் திகதி தொடக்கம் 1988.01.08ஆம் திகதி வரையான காலப்பகுதி காத்தான்குடியில் முக்கிய நாட்களாகக் காணப்பட்டன. தமிழீழ விடுதலைப் புலிகள் என கருதப்பட்ட காத்தான்குடியைச் சேர்ந்த நபர் ஒருவர் கொலை செய்யப்பட்டார். இதனால் சீற்றம் கொண்ட அவ்வமைப்பின் உறுப்பினர்கள் இப்பிரதேசத்தை முற்றுகையிட்டு முடக்கினர். இதனால் மக்கள் வெளியில் செல்லமுடியாதவாறு தடுக்கப்பட்டிருந்தனர். மக்களின் துயர் துடைப்பதற்காக அஹமத் லெப்பை அவர்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு ஜனவரி 08ஆம் திகதி முற்றுகை கைவிட காரணமாக அமைந்தார்கள். இவ்வாறு தமிழ்-முஸ்லிம் இன நல்லுறவின் பாலமாக விளங்கிய அவர்கள் பொதுப் பணிகளை மேற்கொண்டு வீடு திரும்பும் வழியில் 1988.03.06ஆம் திகதி ஷஹீதாக்கப்பட்டார்கள். (நேர்காணல்: அலியார், 2021) இதனால் அஹமத் லெப்பை அவர்கள் அன்றிலிருந்து இன்றுவரை அஷ்ஷஹீத் அஹமத் லெப்பை (இறைபாதையில் உயிரைத் துறந்தவர்களுக்கு அழைக்கப்படும் அறபுப் பெயர்) என்ற கௌரவ பெயருடன் அழைக்கப்படுவதை காண முடிந்தது.

அஷ்ஷஹீத் அவர்கள், தமிழ் உறவுகளுடன் செயற்பட்ட விதத்தை தமிழ் பிரமுகர்களின் வாக்குகள் சான்றுபகர்ந்திருப்பதை இவ்வாய்வின் காண முடிந்தது. கிங்ஸ்லி சுவாம் பிள்ளை என்ற கிறிஸ்தவ பாதிரியின் கருத்துப்படி ‘‘அஹமத் லெப்பை அவர்கள் தமிழ்-முஸ்லிம் இணைப்புப் பாலமாக மட்டுமன்றி இரு சமூகங்களுக்கிடையே பிரச்சினைகள் ஏற்படும் ஆரம்பத்திலேயே அதனை இல்லாதொழிப்பதற்கான கலங்கரை விளக்காக திகழ்ந்தார்கள்’’ (புஹாரி, 2014) என்று குறிப்பிடுகின்றார்.

மட்டக்களப்பு இராம கிரிஷ்ன மிஷன் முதல்வர் சுவாமி ஜீவானந்தாஜி அவர்கள் அஷ்ஷஹீத் பற்றிக் குறிப்பிடும் போது ‘‘இக்கட்டான சூழ்நிலைகளில் எல்லாம் தமிழ்-முஸ்லிம் மக்களின் நலனுக்காக உழைத்த பெரும் மகன். இரு சமூகங்களுக்கிடையே எத்தகைய பிரச்சினைகள் உருவாகினாலும் தராசு போல் செயற்பட்டு நடுநிலை வகிப்பார்’’ (புஹாரி, 2014) இத்தகைய சான்றுகள் அஷ்ஷஹீத் அஹமத் லெப்பை அவர்கள் தமிழ்-முஸ்லிம் இனநல்லுறவைக் கட்டியெழுப்புவதில் மேற்கொண்ட அர்ப்பணிப்புக்களை வெளிக்கொண்டு வருகின்றன.

**பரிந்துரைகள்**

1. அஷ்ஷஹீத் அஹமத் லெப்பை அவர்களின் செயற்பாடுகளை முன்மாதிரியாக கொண்டு இளம் சந்ததியினருக்கும் இவர் பற்றி அறியாதவர்களுக்கும் தெளிவுபடுத்துதல்.
2. இவரது ஆளுமைப் பண்புகளை இளைஞர்கள் மத்தியில் கொண்டு சேர்த்தல், பயிற்றுவித்தல், முகாமைத்துவம் செய்தல்.
3. இனநல்லுறவுக்காக இவர் மேற்கொண்ட சேவைகளை நூலுருப்படுத்தி நாட்டில் காணப்படுகின்ற அனைத்து நூலகங்களுக்கும் வழங்குதல்.
4. தமிழ்-முஸ்லிம் இரண்டு சமூக பிரதிநிதிகளிடமிருந்தும் இவர் பற்றிய ஆக்கங்களை திரட்டி ஆவணப்படுத்துதல்.
5. தமிழ்-முஸ்லிம் இனநல்லுறவை மேன்படுத்துவதற்கு அவர் கையாண்ட உத்திகளையும் நுட்பங்களையும் தற்காலத்திற்கேற்றவாறு வடிவமைத்தல்

**முடிவுரை**

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்-முஸ்லிம் இனநல்லுறவைக் கட்டியெழுப்புவதில் அஷ்ஷஹீத் அஹமத் லெப்பை அவர்களின் பங்களிப்புக்கள் அளப்பரியதாகும். இதற்கு தமிழ், முஸ்லிம் புத்திஜீவிகளின் வாக்குகள் சான்றுபகர்கின்றன. இவர் வாழ்ந்த காலத்தில் இனநல்லுறவு பெரிதும் பேணப்பட்டு இரண்டு சமூகங்களும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தார்கள். இன்றைய காலகட்டத்தில் இவர் போன்று பெயர் குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு இனநல்லுறவை கட்டியெழுப்பும் தனி மனிதர்களைக் காண முடியவில்லை. பன்மைத்துவ சமூகத்தில் மிகவும் அவசியமாக செய்ய வேண்டிய ஒன்றாக விளங்கும் இன நல்லுறவைக் கட்டியெழுப்ப முனையும் நிறுவன அமைப்புக்கள் மற்றும் தனிமனித ஆளுமைகளுக்கு அஷ்ஷஹீத் அஹமத் லெப்பை அவர்களின் இத்துறைசார்ந்த செயற்பாடுகள் பெரிதும் வழிகாட்டியாக அமையும் என்பதை இவ்வாய்வின் கண்டறிதல்கள் வெளிப்படுத்தியுள்ளன.

**உசாத்துணைகள்**

**நூல்கள்**

கோபால சிங்கம், எஸ்., (2005). *மட்டக்களப்பு வரலாறு ஓர் அறிமுகம்*, மட்டக்களப்பு: மனுவேதா.

புஹாரி, எம்.எச்.எம்., அப்துல் ஜவாத், ஏ.எல்., மற்றும் சுபைர், எஸ்.எம்.எம்., (2004). *காத்தான்குடி வரலாறு ஓர் அறிமுகம்*, காத்தான்குடி: பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம்.

புஹாரி, எம்.எச்.எம்., (2015). *அஷ்ஷஹீத் அஹமத் லெப்பை ஹாஜியார் வாழ்வும் பணியும்*, காத்தான்குடி: பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம்.

றகுமான், எம்.ஏ.சி.எ., இஸ்ஸதீன், ஏ.எஸ்., தௌபீக் ஹஸன், எம்.ஐ.எம்., மற்றும் ஜ.ஃபர் ஹுஸைன், ஏ. (2005). *ஏறாவூர் வரலாறு,* ஏறாவூர்: ஏறாவூர் வரலாற்று ஆய்வு மையம்.

நடராசா, எப். எக். சி., (2000). *மட்டக்களப்பு மான்மியம்,* மட்டக்களப்பு: மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவை.

மத்தியு, எஸ். ஏ. ஐ., (2009). *வரலாறு தரும் மட்டக்களப்பு,* மருதமுனை: ஜெஸா கிறபிக்ஸ்.

***ஆய்வுக் கட்டுரைகள்***

ஹஸன், ஜே.ஐ. மற்றும் ஜெஸீல், எம்.ஐ.எம். (2017). முசலிப் பிரதேசத்தில் தமிழ் - முஸ்லிம் நல்லுறவு: முஸ்லிம்களின் வெளியேற்றத்திற்கு முன்னரான காலம் - 1990, 05th international conference, கலைகலாசார பீடம் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம். Pp 51 -55

ஹபீபுல்லாஹ், எம்.டி. (2019). இன நல்லுறவு, சமாதானம் என்பவற்றை கட்டியெழுப்புவதில் முஸ்லிம் சமய நிறுவனங்களின் பங்களிப்பு (கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமாவின் இன நல்லுறவு சமாதானச் செயற்பாடுகளை மையப்படுத்திய ஓர் ஆய்வு), *Sri Lankan Journal of Arabic and Islamic Studies*, ISSN 2550 - 3014, Vol: 2 Issue:1. இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம். ீ 43-56

நிஸ்பா, எம்.எஸ்.எப்., (2019). சமகால இலங்கையில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் முஸ்லிம்களின் பங்கு: களுத்துறை முஸ்லிம் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு, 6th International symposium, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka. Pp 114 - 122

சிந்து பிரியா, எஸ்., (2016). சமூக நல்லுறவை மேம்படுத்துவதில் பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தின் பங்களிப்பு - யாழ் மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு, 6th nternational symposium, South Eastern University of Sri Lanka. Pp 917 - 928

Abdul Majith, M.L. and Lasmiya, A.S. (2018) INTER - RELATIONSHIP BETWEEN TAMIL & MUSLIM COMMUNITY: A STUDY BASED ON NATPIDDIMUNAI, 5th nternational Symposium, South Eastern university of Sri Lanka. Pp157- 161

**நேர்காணல்கள்**

1. அலியார், முன்னாள் காழி நீதிபதி, 2021.04.20
2. அஹமட் லெப்பை மர்சூக், முன்னாள் தவிசாளர், 2021.05.30
3. அ. செல்வம், சுகாதார மேற்பார்வையாளர், 2021.05.12
4. க. தெய்வநாயகம், விவசாயி, 2021.04.25
5. குப்பன் கோபால், வியாபாரம், 2021.04.20
6. தௌபீக், ஓய்வு நிலை ஆசிரியர், 2021.05.10
7. முபாரக், நூலகர், 2021.04.10
8. விஷ்வலிங்கம் நாகராஜா, விவசாயி, 2021.04.25